OS.No. 174/2012

Dated : 17.06.2022

Time: 3.10 p.m To 3.30 p.m.

D.W. - 2 சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசராணை செய்யப்பட்டார்.

குறுக்குவிசாரணை

நான் நடுகவுண்டர் மகன் கோவிந்தன் என்பவரிடம் இருந்து கிரயம் வாங்கினேன். மேற்படி நடு கவுண்டர் சின்னத்தம்பி, வெள்ளையன் ஆகிய மூவருக்கும் சேர்ந்து 9.90 ஏக்கர். அந்த சொத்து சம்மந்தமான சர்வே எண்.1004/3 வில்லங்கசான்றிதழ் பார்த்தேன் ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி வில்லங்கத்தை பார்த்து அது விரோதமாக இருந்ததால்தான் அதை நான் வழக்கில் முன்நிருத்தவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்து சம்மந்தமான பட்டாவை வழக்கில் முன்நிருத்தவில்லை என்றால் இருக்கிறது வழக்கறிஞரை கேட்டால் தெரியும். மேற்படி சர்வே எண்ணில் மேரி நீலாவதி, அலமேலு ஆகியோருக்கு கிரயம் கொடுத்தற்கு போக 1.30 ஏக்கர் தான் இருந்தது என்றால் அது தவறு. மேற்படி எனக்கு கிரயம் கொடுத்த நடுகவுண்டருக்கு கிரயம் கொடுத்த நாளில் அந்த சர்வே எண்ணில் 2.90 ஏக்கர் தான் இருந்தது என்றும், எனவே எனக்கு 3.90 ஏக்கர் கொடுத்ததே தவறானது என்றால் சரியல்ல.

நான் பொது அதிகாரபத்திரத்தை நான் ரத்து செய்துவிட்டேன் என சொல்லி, நான் அனுப்பியதாக சொல்லும் கடிதத்தை இவ்வழக்கில் நான் முன்நிருத்தவில்லை. நான் அதுபோல் கடிதமே அனுப்பவில்லை என்றும், நான் சொல்லும் தபால் அடையாள அட்டை அது சம்மந்தப்பட்டதே அல்ல என்றும் சொன்னால் அது சரியல்ல. மேற்படி பொது அதிகாரம் பத்திரம் எழுதிய நாளில் அந்த சொத்தின் மதிப்பு ரூ. 10 லட்சம் என்றால் அது தவறு. அது அதிக விலையில் இருக்கும்.

மேற்படி சொத்தின் மதிப்பே அன்றைய தேதியில் 10 லட்சம்தான் நான் தவறாக அதிகவிலை சொல்கிறேன் என்றால் அது தவறு. தற்போது உடைய சொத்து மதிப்பு 3 கோடி ரூபாய் இருக்கும். அந்த தொகையை கொடுத்தால் எழுதிகொடுக்க தயார இருப்பிர்களா என்றால் இல்லை. அசல் பொது அதிகார பத்திரத்தை நான் முன்நிருத்தவில்லை என்றால் அது வீட்டில் இருக்கிறது.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்பட்டது)

Taken down before / by me in open court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-K.Ananthan,
**Subordinate Judge,**
**Attur.**